வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்பு நோக்கத்திற்காக ஒன்றாக சேர்க்கப்படும்.

### 13. தனித்துப் பாதுகாக்கப்படும் வேறு ஏதாவது கணக்குகள் இருக்கின்றனவா?

- **கூட்டுக் கணக்குகள்** – கூட்டுக் கணக்கு வைத்திருப்போரின் பெயர்களை உறுப்பு வங்கி தெரிவிக்கும் குறிப்புக்கள் அடிப்படையில் கூட்டுக் கணக்குகள் தனி வைப்புத்தொகை காப்புறுதிப் பாதுகாப்பை அனுபவிக்கின்றன.
- **தர்மகர்த்தா கணக்குகள்** – தர்மகர்த்தா கணக்குகளுக்கு, உறுப்பு வங்கியின் குறிப்புகளில் உள்ளபடி ஒவ்வொரு வாரிசுகளும் சொந்தம் கொண்டாடும் தொகைகள் மற்றும் ஒவ்வொரு வாரிசுகளின் நலன்களை தர்மகர்த்தா தெரிவித்தால் வாரிசுகள் தனித்தனி பாதுகாப்பை அனுபவிக்க முடியும். தங்கள் பெயர்களில் வைக்கப்பட்டிருக்கும் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புத்தொகைகளுக்கு வாரிசுகள் தனித்தனியாக பாதுகாக்கப்படுகின்றனர்.
- **ஒரே சொத்துடைமைத்துவம், பங்காளித்துவம் அல்லது தொழில் புரிபவர்கள் (உதாரணத்திற்கு கட்டட வரைபடக் கலைஞர்கள், பல் மருத்துவர்கள்)** – இந்தக் கணக்குகளும் தனித்தனியாகப் பாதுகாக்கப்படுகின்றன.

*ஓர் உறுப்பு வங்கியில் பல கணக்குகளை வைத்திருக்கும் ஒரு வைப்புத்தொகையாளருக்கு எவ்வாறு தனித்தனி வைப்புத்தொகை பாதுகாப்பு கிடைக்கிறது என்பதற்கான ஓர் உதாரணத்தை கீழே காணலாம்:*

| வைப்புத்தொகையாளர் | மாதிரி வைப்புத் தொகை | தொகை (RM) | காப்புறுதி செய்யப்பட்டது (RM) |
|---|---|---|---|
| அமாட் | சேமிப்புகள் | 300,000 | 250,000 |
| அமாட்டும் மனைவியும் | நடப்பு | 300,000 | 250,000 |
| அமாட், மனைவி மற்றும் மகள் | சேமிப்புகள் | 250,000 | 250,000 |
| அமாட், லியோங் & கோ (சட்ட நிறுவனம்) | நடப்பு | 200,000 | 200,000 |
| அமாட் & அலி Sdn. Bhd | நடப்பு | 50,000 | 50,000 |
| மொத்த வைப்புத்தொகைகள் | | 1,100,000 | |
| ஒன்றிணைக்கப்பட்டதில் பாதுகாக்கப்பட்ட மொத்த வைப்புத்தொகைகள் | | | 1,000,000 |

### 14. இரண்டு உறுப்பு வங்கிகள் இணைக்கப்பட்டால், எனது வைப்புத்தொகைகள் என்னவாகும்?

இரண்டு ஆண்டு காலம் அல்லது முதிர்ச்சி அடையும் வரையில் அல்லது வைப்புத்தொகை மீட்டுக் கொள்ளப்படும் வரையில், எது முன்கூட்டியே நிகழ்கிறதோ அதற்கு ஏற்ப தனித்தனி வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்பை நீங்கள் தொடர்ந்து அனுபவிப்பீர்கள்.

### 15. ஓர் உறுப்பு வங்கி தோல்வியுறும் பட்சத்தில் நான் எவ்வாறு வைப்புத்தொகை காப்புறுதி பணத்தைக் கோரமுடியும்?

நீங்கள் எந்த ஒரு கோரிக்கைக்கும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை. காப்புறுதி செய்யப்பட்ட வைப்புத்தொகைகளுக்கு எவ்வாறு, எங்கே மற்றும் எப்போது பணம் வழங்கப்படும் என்பதை PIDM அறிவிக்கும். சம்பந்தப்பட்ட உறுப்பு வங்கியின் வைப்புத்தொகை குறிப்புக்கள் அடிப்படையில் PIDM பணம் வழங்கும்.

### 16. நான் ஒரு மலேசியரல்ல. அப்படியென்றால் எனது வைப்புத்தொகைகள் பாதுகாக்கப்படுகின்றனவா?

இதில் உங்களின் வசிப்பிடம் அல்லது பிரஜை விவகாரம் வைப்புத்தொகை காப்புறுதிப் பாதுகாப்பைப் பாதிக்கவில்லை. PIDM-மின் ஓர் உறுப்பு வங்கியில் வைக்கப்பட்டிருக்கும் வைப்புத்தொகைகளுக்கு ஒரு வங்கி ஒரு வைப்புத்தொகையாளர் எனும் அடிப்படையில் RM250,000 வரையில் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

### 17. மலேசியாவுக்கு வெளியில் இருக்கும் உள்நாட்டு வங்கிகளின் கிளைகள் மற்றும் துணை நிறுவனங்களில் உள்ள வைப்புத்தொகைகளுக்கு பாதுகாக்கப்படுகின்றனவா?

இல்லை, அவை அந்த நாட்டின் வைப்புத்தொகை காப்புறுதி அல்லது பாதுகாப்புத் திட்டத்தினால் பாதுகாக்கப்படலாம்.

### 18. வைப்புத்தொகை காப்புறுதி குறித்து மேல் தகவல்களுக்கு நான் யாருடன் தொடர்பு கொள்வது?

- PIDM-மின் இலவச தகவல் எண் **1-800-88-1266**-றுக்கு திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரையில் காலை 8.30 முதல் மாலை 5.30 வரையில் அழையுங்கள்.
- **info@pidm.gov.my**-க்கு மின்னஞ்சல் செய்யுங்கள்
- **www.pidm.gov.my** என்ற PIDM-மின் அகப்பக்கத்துக்கு வாருங்கள்

PIDM

Perbadanan Insurans Deposit Malaysia

மலேசியாவில் உங்களின் காப்புறுதியும் வைப்புத்தொகைகளும் பாதுகாக்கப்படுகின்றன

தொடர்பு மற்றும் பொதுவிவகாரப் பிரிவு
Level 12, Quill 7, No. 9, Jalan Stesen Sentral 5,
Kuala Lumpur Sentral, 50470 Kuala Lumpur.
தொலைபேசி: 603-2173 7436 தொலைநகல்: 603-2173 7527 / 2260 7432

PIDM

Perbadanan Insurans Deposit Malaysia

மலேசியாவில் உங்களின் காப்புறுதியும் வைப்புத்தொகைகளும் பாதுகாக்கப்படுகின்றன

# வைப்புத்தொகை காப்புறுதி



மலேசிய வைப்புத்தொகை காப்புறுதிக் கழகம் (PIDM) உங்களின் வங்கி வைப்புத்தொகைகள் உட்பட உங்களின் தக்காஃபுல் மற்றும் காப்புறுதி அனுகூலங்களைப் பாதுகாக்கின்றது. PIDM-மினால் நிர்வகிக்கப்படும் வைப்புத்தொகை காப்புறுதி முறை மற்றும் தக்காஃபுல் மற்றும் காப்புறுதி அனுகூலங்கள் பாதுகாப்பு முறை வழி, தக்காஃபுல் சான்றிதல்ள் மற்றும் காப்புறுதி பாலிசிகளின் உரிமையாளர்கள் உட்பட வைப்புத்தொகையாளர்கள் அனைவரும் தங்களின் தகுதிபெற்ற வங்கி வைப்புத்தொகைகள் மற்றும் தக்காஃபுல் மற்றும் காப்புறுதி அனுகூலங்களுக்கான சட்டப்பூர்வமான மற்றும் தெளிவான பாதுகாப்பை இப்போது அனுபவிக்கலாம். மலேசிய நிதி முறையில் நிலைத்தன்மையை ஊக்குவித்து பங்களிக்கும் PIDM-மின் அதிகாரத்துக்கு ஏற்ப இது அமைந்திருக்கிறது.

## PIDM என்பது என்ன?

PIDM என்பது, மலேசிய வைப்புத்தொகை காப்புறுதிக் கழகச் சட்டத்தின் (PIDM சட்டம்) கீழ் நிறுவப்பட்ட ஓர் அரசாங்க நிறுவனம். வைப்புத்தொகையாளர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில் தேசிய வைப்புத்தொகை காப்புறுதி முறையை நிர்வகிப்பதற்காக 2005-ஆம் ஆண்டில் PIDM நிறுவப்பட்டது. 2010-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி முதல், தக்காஃபுல் சான்றிதழ்கள் மற்றும் காப்புறுதி பாலிசிகளின் உரிமையாளர்களுக்கு பாதுகாப்பு வழங்க தக்காஃபுல் மற்றும் காப்புறுதி அனுகூலங்கள் பாதுகாப்பு முறையை நிர்வகிக்கும் வகையில் PIDM-மின் பணி விரிவுப்படுத்தப்பட்டிருக்கிறது.

## PIDM எத்தகைய பாதுகாப்பை வழங்குகிறது?

| வைப்புத்தொகை காப்புறுதி முறை | தக்காஃபுல் மற்றும் காப்புறுதி அனுகூலங்கள் பாதுகாப்பு முறை (TIPS) |
|---|---|
| ஓர் உறுப்பு வங்கி தோல்வியுறும் பட்சத்தில், உறுப்பு வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் வைப்புத் தொகையாளர்களின் காப்புறுதி செய்யப்பட்ட வைப்புத் தொகை களுக்கு இழப்பு ஏற்பட்டால் அவர்களைப் பாதுகாக்கும். | ஓர் உறுப்பு காப்புறுதி நிறுவனம் தோல்வியுறும் பட்சத்தில், தக்காஃபுல் சான்றிதழ்கள் மற்றும் காப்புறுதி பாலிசிகளின் உரிமையாளர்களின் தகுதிபெற்ற தக்காஃபுல் மற்றும் காப்புறுதி அனுகூலங்களுக்கு இழப்பு ஏற்படுவதில் இருந்து அவர்களைப் பாதுகாக்கும். |

## இது எனக்கு எவ்வாறு பலனளிக்கிறது?

- PIDM உங்கள் வங்கி வைப்புத்தொகைகளைப் பாதுகாப்பதுடன் ஓர் உறுப்பு வங்கி தோல்வியுறும் பட்சத்தில் காப்புறுதி செய்யப்பட்ட உங்களின் வைப்புத்தொகைக்கான பணத்தை உடனடியாகத் திருப்பித் தருகிறது.
- ஓர் உறுப்பு காப்புறுதி நிறுவனம் தோல்வியுற்றால், தகுதிபெற்ற தக்காஃபுல் அல்லது காப்புறுதி அனுகூலங்களுக்கு இழப்பு ஏற்படுவதில் இருந்து PIDM அவர்களைப் பாதுகாக்கும்.
- PIDM-மினால் வழங்கப்படும் பாதுகாப்பு இயல்பாகவே வழங்கப் படுகிறது என்பதுடன் அதற்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை.
- PIDM-மினால் வழங்கப்படும் பாதுகாப்புக்கு வைப்புத்தொகையாளர்கள் அல்லது தக்காஃபுல் சான்றிதழ்கள் மற்றும் காப்புறுதி பாலிசிகளின் உரிமையாளர்கள் கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதுமில்லை.

**1. வைப்புத்தொகை காப்புறுதி என்றால் என்ன?**

வைப்புத்தொகை காப்புறுதியானது, ஓர் உறுப்புக் கழகம் தோல்வியுறும் பட்சத்தில், வைப்புத்தொகையாளர்களின் (தனிநபர் அல்லது வர்த்தகராக இருந்தாலும்) காப்புறுதி செய்யப்பட்டுள்ள வைப்புத்தொகைகளுக்கு இழப்பு ஏற்பட்டால் அவர்களைப் பாதுகாக்கும் ஒரு முறையாகும். மலேசியாவில் வைப்புத்தொகை காப்புறுதி முறை PIDM-மினால் நிர்வகிக்கப்படுகிறது.

**2. எந்தெந்த வங்கிகள் PIDM உறுப்புக் கழகங்கள்?**

மலேசியாவில் செயல்படும் வெளிநாட்டு வங்கிகள் உட்பட, 1989-ஆம் ஆண்டு வங்கி மற்றும் நிதிக் கழகங்கள் சட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டிருக்கும் அனைத்து வழக்கமான வங்கிகளும் 1983-ஆம் ஆண்டு இஸ்லாமிய வங்கிச் சட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டிருக்கும் அனைத்து இஸ்லாமிய வங்கிகளும் PIDM-மின் உறுப்புக் கழகங்களாகும். மலேசிய வைப்புத்தொகை காப்புறுதிக் கழகச் சட்டத்தின் கீழ் கூறப்பட்டிருப்பதுபோல் உறுப்பியத்துவம் கட்டாயமானதாகும்.

PIDM-மை **1-800-88-1266** என்ற எண்ணில் அழைப்பதன் மூலம் அல்லது PIDM-மின் அகப்பக்கமான **www.pidm.gov.my**-யில் PIDM-மின் உறுப்புக் கழகங்களின் (உறுப்பு வங்கிகள் என்றும் குறிப்பிடப்படுகிறது) பட்டியலைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் அனைத்து வங்கிக் கிளைகளின் நுழைவயில்களிலும் இந்த உறுப்பியத்துவ அடையாளத்தைக் காணுங்கள்.

PIDM Perbadanan Insurans Deposit Malaysia Protecting Your Insurance And Deposits In Malaysia
AHLI PIDM
MEMBER OF PIDM
PIDM 的 成 员
PIDM-மின் உறுப்புக் கழகம்
www.pidm.gov.my
Toll-free: 1-800-88-1266

**3. வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்புக்கு நான் விண்ணப்பிக்கவோ அல்லது பதிவு செய்யவோ வேண்டுமா?**

இல்லை, பாதுகாப்புக்கு நீங்கள் விண்ணப்பிக்கவோ அல்லது பதிவுச் செய்யவோ வேண்டியதில்லை. தகுதிபெற்ற வைப்புத்தொகை கணக்குகளுக்கு இயல்பாகவே வைப்புத்தொகை காப்புறுதி வழங்கப்படுகிறது.

**4. எனது வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்பின் வரம்பு என்ன?**

ஓர் உறுப்பு வங்கிக்கு ஒரு வைப்புத்தொகையாளர் எனும் அடிப்படையில் RM250,000 வரை உங்களின் தகுதிபெற்ற வைப்புத்தொகைகள் பாதுகாக்கப்படுகின்றன. இந்த RM250,000 வரம்பு ஒரு வைப்புத்தொகையின் மூலத்தொகை மற்றும் வட்டி/லாபம் இரண்டையும் உள்ளடக்கி இருக்கிறது.

**5. எனது வைப்புத்தொகைகள் RM250,000-க்கும் மேல் இருந்தால் அவற்றுக்கு நான் கூடுதல் காப்புறுதியை வாங்க முடியுமா?**

இல்லை. வைப்புத்தொகை காப்புறுதி என்பது பொது அல்லது ஆயுள் காப்புறுதி சேவையல்ல. PIDM மூலம் அரசாங்கம் இதை வழங்குகிறது.

**6. வைப்புத்தொகை காப்புறுதிக்கு எந்த மாதிரியான வைப்புத் தொகைகள் தகுதி பெறுகின்றன?**

நடப்பு மற்றும் சேமிப்பு வைப்புத்தொகை கணக்குகள், நிரந்தர வைப்புத்தொகைகள் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புத்தொகைகளும் தகுதிபெற்ற வைப்புத்தொகைகளில் அடங்கும்.

**7. எந்த மாதிரியான வைப்புத்தொகைகள் பாதுகாக்கப்படாதவை?**

மலேசியாவில் செலுத்தப்படாத வைப்புத்தொகைகள், வங்கி களுக்கு இடையிலான நிதி சந்தைப் பணம், பேரம் பேசத்தக்க வைப்புத்தொகை நிதி (NIDs), இதர வைப்புத்தொகை நிதி மற்றும் மறுகொள்முதல் உடன்படிக்கைகள் PIDM-மினால் பாதுகாக்கப்படாதவையாகும்.

**8. யூனிட் டிரஸ்டுகள் வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்புக்கு தகுதியானவையா?**

இல்லை. யூனிட் டிரஸ்டுகள் வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்புக்கு தகுதியானவையல்ல.

**9. வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்புக்கு எனது வைப்புத்தொகைகள் தகுதி பெற்றிருப்பது எனக்கு எவ்வாறு தெரியும்?**

உங்கள் நிதியை நீங்கள் வங்கியில் வைப்பதற்கு முன்னர் ஒரு வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்புக்கு தகுதிபெறுகிறதா இல்லையா என்பதை உங்களின் உறுப்பு வங்கி உங்களுக்கு அவசியம் தெரியப்படுத்தும். தகுதிபெற்ற அனைத்து வைப்புத்தொகைகளும் ஒவ்வோர் உறுப்பு வங்கியினால் ஒரு பதிவில் பட்டியலிடப்பட்டிருக்கும்.



பாதுகாப்பின் அளவு மற்றும் வைப்புத்தொகை காப்புறுதி பாதுகாப்பு குறித்த தகவல்களை நேர்த்தியான, பொருத்தமான மற்றும் சரியான நேரத்துடன் உறுப்பு வங்கிகள் வழங்குகின்றனவா என்பதை உறுதிப்படுத்த வைப்புத்தொகை காப்புறுதி குறித்த தகவலின் விதிமுறை சட்டவிதிகள் 2011-க்கு ஏற்ப இந்த கோரிக்கைகள் அமைந்திருக்கின்றன.

**10. வழக்கமான மற்றும் இஸ்லாமிய வைப்புத்தொகைகள் தனித்தனியாக பாதுகாக்கப்படுகின்றனவா?**

ஆம். ஒரு வங்கி ஒரு வைப்புத்தொகையாளர் எனும் அடிப்படையில் வழக்கமான மற்றும் இஸ்லாமிய வைப்புத்தொகைகள் தனித்தனியாக RM250,000 வைப்புத்தொகை காப்புறுதி வரம்புக்கு தகுதிபெற்றிருக்கின்றன.

**11. நான் பல உறுப்பு வங்கிகளில் வைப்புத்தொகைகளை வைத்திருக்கின்றேன். எனது அனைத்து வைப்புத் தொகைகளும் காப்புறுதி பாதுகாப்பு நோக்கத்திற்காக ஒன்றாக சேர்த்துக் கொள்ளப்படுமா?**

இல்லை. வெவ்வேறு உறுப்பு வங்கிகளில் இருக்கும் உங்களின் வைப்புத்தொகைகள் தனித்தனியாகவே பாதுகாக்கப்படும். ஒரு வங்கி ஒரு வைப்புத்தொகை எனும் அடிப்படையில் RM250,000 வைப்புத்தொகை காப்புறுதி வரம்பு வழங்கப்படும்.

**12. ஒரே உறுப்பு வங்கியின் வெவ்வேறு கிளைகளில் நான் வைப்புத்தொகைகளை வைத்திருக்கின்றேன். எனது அனைத்து வைப்புத்தொகைகளும் தனித்தனியாக பாதுகாக்கப்படுமா?**

இல்லை. ஒரே உறுப்பு வங்கியின் வெவ்வேறு கிளைகளில் வைக்கப்பட்டிருக்கும் வைப்புத்தொகைகள் அனைத்தும்